# Use What We Have Correctly

## இருப்பதை பயன்படுத்துவோம் - சரியான முறையில்

<u>ஸ்ரீ முருகன் தமிழ் மகா வித்தியாலயம் - ஏலாலை</u>

2010 ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் Intel Teach ஆசிரியர் பயிற்சி செயலமர்வு ஒன்று நடைப்பெற்றது. இச் செயலமர்வில் காணக்கூடிய மிகவும் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், கலந்து கொண்ட அனைவரிடமும் இருந்த கணினி பற்றிய தொழிநுட்ப அறிவாகும். பயிற்சி செயலமர்வு நடைப்பெற்ற எட்டு நாட்களிலும் ஆசிரியர்கள் எம்மிடம் பெற்றுக்கொண்ட தொழிநுட்ப அறிவு குறைவாகவே இருந்தது. இனுவில் இந்து வித்தியாலத்தில் நடைப்பெற்ற இப்பயிற்சிக்கு 23 ஆசிரியர்கள் சமூகமளித்திருந்தனர். இந்த ஆசிரியர்களுக்கான எட்டு நாள் பயிற்சிநெறி மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

பெரும்பாலானோர் ஏதாவது ஒரு விடயத்தை செய்யுமுன் குறைபாடுகளை காண்பதற்கு பழகியுள்ளனர். அதே போன்று ஒரு விடயத்தை செய்வதற்கு வளம் இல்லை மற்றும் இருக்கும் வளம் மட்டுப்படுத்தப்பட்டது என பல காரணங்களை கூறுவதற்கு பழகியுள்ளனர். இவர்களுக்கிடையில் குறிப்பிட்ட சிலர் மட்டுப்படுத்தப்பட்ட வளத்தைக் கொண்டு உச்ச பயனை பெற்றுக்கொள்கிறார்கள். நாங்கள் இவ்வாறான நபர்கள் இருவரை யாழ்ப்பாண பிரதேசத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் சந்தித்தோம்.

ஏலாலை ஸ்ரீ முருகன் தமிழ் மகா வித்தியாலத்திலிருந்து கலந்து கொண்ட செல்வி.மகிந்தாவும் திரு.ஜெயகாந்தும் இக்கதைக்கு அடிப்படையாக அமைந்த முக்கியமான இரு பாத்திரங்களாகும். இவர்கள் பாடசாலைக்குச் சென்று இப்பயிற்சியை நடாத்துவதற்கு முன் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

பாடசாலையில் இருப்பது இரண்டு கணினிகள் மாத்திரமே அத்துடன் இணையத்தள வசதியும் இல்லை. இவர்களை தவிர்த்து இன்னும் 19 ஆசிரிய ஆசிரியைகள் இப்பயிற்சி செயலமர்வில் பங்குப்பற்ற விருப்பதுடன் இருந்தனர். அவர்கள் முன் இருப்பது இலகுவான சவால் அல்ல என்பது தெளிவு. இருப்பினும் இந்த சவால்களுக்கு அவர்கள் சளிக்காமல் முகம் கொடுத்தனர்.

இவர்கள் இருவரும் பாடசாலைக்குச் சென்ற பின்பு முதலாவதாக அதிபருடன் இப்பயிற்சியை தமது பாடசாலையில் எவ்வாறு நடாத்துவது என கலந்துரையாடினர். அதன் பின்பு அதிபர் ஆசிரியர் கூட்டம் ஒன்றை செய்து ஆசிரியர்களுடன் இப்பயிற்சி சம்பந்தமாக கலந்துரையாடி பயிற்சியை ஆரம்பிப்பதற்கு தினமொன்றை தீர்மானித்துக் கொண்டனர்.

இவர்கள் பாடசாலையிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே தடவையில் விரிவுரையை முடித்த பின்பு செய்முறை பயிற்சிகளை குழுக்களாக பிரித்து நடாத்தினர். பின்பு ஆசிரியர்கள் ஓய்வாக இருக்கும் நேரத்திலும் தமது வீடுகளிலும் அல்லது

செல்வி.மகிந்தாவ திரு.ஜெயகாந்த் இருவரின் உதவியுடன் பயிற்சியை தொடர்ந்து மேற்கொண்டனர்.



செல்வி.மகிந்தா



திரு.ஜெயகாந்த்

இதற்கிடையில் வெற்றிகரமான முறையில் பாடசாலைக்குள் நடாத்தப்படும் இப்பயிற்சியினால் ஆசிரியர் குழாமில் புரிந்துணர்வும் சகோதரத்தவமும் விருத்தியடைந்தது. இதனால் ஆசிரியர்கள் தமக்கு சொந்தமான கணினிகளை பாடசாலைக்கு கொண்டு வந்தனர். இனணயத்தள பாவணைக்காக அவர்கள் இருவரின் தனிப்பட்ட மொடம்களை பாடசாலைக்கு கொண்டு வந்து ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கு வசதி செய்து கொடுத்திருந்தனர்.

இக்குழு ஒரு மாதத்திற்குள் இப்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்ததுடன் அக்குழுவில் பாடசாலை அதிபரும் அடங்குகிறார்.

இதனால் இன்று இந்த பாடசாலையைப் பற்றி வடக்கு மாகாணம் முழுவதும் பேசப்படுகின்றது. அதே போன்று இவர்கள் இருவரினதும் இச்செயற்பாட்டினால் இன்று கல்வி அமைச்சின் மூலம் இப்பாடசாலைக்கு கணினி அறை ஒன்றை நிர்மானிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று பல பாடசாலைகளில் வளங்கள் வீணாக்கப்படுவதுடன் வேறு பாடசாலைகளில் வளங்கள் குறைபாடு காரணமாக வேலை செய்ய முடியாது என கூறுகின்றனர். ஆனாலும் ஏலாலை ஸ்ரீ முருகன் பாடசாலை ஏனையோருக்கு காட்டியுள்ள மாதிரி எவ்வளவு பெறுமதி? ஆதலால் இருக்கும் வளத்தைக் கொண்டு உச்சப் பயனை பெற்றுக்கொள்வோம். அப்போது எமக்கு தானாகவே வளங்கள் வந்து சேரும்.




T. மகிந்தா J. ஜெயகாந்த்

ஸ்ரீ முருகன் தமிழ் மகா வித்தியாலயம்

ஏலாலை.

வலிகாமம் கல்வி வலயம்,

யாழ்ப்பாணம்